IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 72/2023

Deposition of Witness : PW 1

Name : பாஞ்சாலையம்மாள் (வயது – 68)

Father's Name /W/o : க/பெ சுப்பிரமணி

Calling : –

Address : பள்ளிப்பட்டு

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.06.2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்து முதலில் என் தந்தை ரங்கநாதன் என் தாயார் தனபாக்கியம் பெயரில் வாங்கினார் என்றால் சரிதான். எனக்கு 17 வயதில் திருமணம் நடைபெற்றதா என்றால் ஆம். திருமணத்திற்கு பிறகு என் கணவருடன் எந்த இடத்தில் குடியிருந்தேன் என்றால் பள்ளிப்பட்டு பக்கத்தில் ஈடிகாபள்ளி கிராமத்தில் வசித்து வந்தேன். நான் கணவருடன் சென்ற பிறகு என் சகோதரர்களான சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி தாவா சொத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. 2010 ஆம் ஆண்டில் சிவலிங்கம் தாவா சொத்தில் தனியாக வீடு கட்டி கிரஹப்பிரவேசத்திற்கு அழைத்ததற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் சிவலிங்கம் கட்டிய வீடு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என் சகோதரர் ராமலிங்கம் கட்டிய வீடு என்றால் சரிதான். மேற்படி வீடு 2010 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றாலும் கிரஹப்பிரவேசத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டில் கோவிந்தசாமி தாவா சொத்தில் தனியாக வீடு கட்டினார் என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் கோவிந்தசாமி தாவா சொத்தில் தனியாக கட்டிய வீடு என்றால் சரிதான். அவருடைய வீட்டின் கிரஹப்பிரவேசத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி அவர்களின் சொத்தில் தனியாக வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி அவர்அவர்களது வீட்டிற்கு வரிகட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. என் கணவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் விவசாயம் செய்து கொண்டிருந்தார். என் கணவர் விவசாயம் செய்து கொண்டிருந்தபோது அவருக்கு கடன் ஏற்பட்டதா என்றால் ஆம். மேற்படி கடனை தீர்ப்பதற்கு என் சகோதரர்கள் சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி பணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. என் கணவர் எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகமில்லை. என் கணவரின் கடனை என் சகோதரர்கள் சிவலிங்கம், ராமலிங்கம் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் தலா ரூ.15,000/– கொடுத்து கடனை தீர்த்தார்கள் என்றால் சரியல்ல. என் மகன் பெயர் என்னவென்றால் பாஸ்கர்.

5. சிவலிங்கத்தின் மகன் 6 ஆம் பிரதிவாதி சிவபாதம் என்றால் சரிதான். என் மகன் பாஸ்கர் 6 ஆம் பிரதிவாதியின் மகள் சந்தியாவை தனியாக அழைத்து சென்று திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். குடும்பத்தினர் சேர்ந்து திருமணம் நடத்தி வைக்காமல் அவர்களாகவே சென்று திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் மகன் செய்து கொண்ட திருமணத்தில் பிரதிவாதிகளுக்கு உடன்பாடு இல்லை என்றால் சரிதான். என் மகன் திருமணத்தில் இருந்து எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். என் சகோதரர் சிவலிங்கம் இறந்த பிறகு அவரின் வாரிசுகளான அவர் மனைவி லட்சுமி மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள் சிவலிங்கம் கட்டிய வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

6. ராமலிங்கம் இறந்த பிறகு அவரின் வாரிசுகளான அவர் மனைவி இந்திராணி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் அவர் கட்டிய வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். கோவிந்தசாமி மற்றும் அவரின் வாரிசுகள் அவர் கட்டிய வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் மொத்தம் 3 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். என் தாவாவில் 3 வீடுகள் தனித்தனியாக காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**